## September 23, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. அமெரிக்காவுடன் 2010-ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புதிய அணு ஆயுதக் கட்டுப்பாட்டு ஒப்பந்தம் காலாவதியானாலும், அதன் அமலாக்கத்தை மேலும் ஓராண்டுக்கு நீட்டிப்பதாக ரஷிய அதிபர் புதின் அறிவித்துள்ளார்.
    i. 2010-ஆம் ஆண்டின் புதிய அணு ஆயுத கட்டுப்பாட்டுச் சட்டம் ரத்தாவது சர்வதேச நிலைத் தன்மையைக் குலைக்கும். அது அணு ஆயுதப்பரவலுக்குக் காரணமாக அமையும். எனவே, அந்த ஒப்பந்தம் வரும் 2026 பிப்ரவரி 5-ஆம் தேதி காலாவதியானாலும், மேலும் ஓராண்டுக்கு ரஷியா அதை அமல்படுத்தும். இதே நிலைப்பாட்டை அமெரிக்காவும் கடைப்பிடிக்க வேண்டும்.
    ii. அந்த ஒப்பந்தத்தின் கீழ், 1,550-க்கும் குறைவாகவே அணு குண்டுகளை வைத்திருக்கவும், 700-க்கும் குறைவாக அணு ஆயுதம் ஏந்தி தாக்குதல் நடத்தக்கூடிய விமானங்கள் மற்றும் ஏவுகணைகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தவும் இரு நாடுகளும் ஒப்புக் கொண்டன.
2. கடந்த 2023- ஆம் நிதியாண்டில் நாட்டில் மொத்தமுள்ள 28 மாநிலங்களில் 16 மாநிலங்கள் வருவாய் உபரியை எட்டியதாகவும் 12 மாநிலங்களில் வருவாய் பற்றாக்குறை நிலவியதாக சிலவும் தலைமை கணக்குத் தணிக்கையாளர் (சிஏஜி) வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.
    i. இதில் ரூ.37,263 கோடி வருவாய் உபரியுடன் உத்தர பிரதேசம் முதலிடத்தில் உள்ளது.
    ii. 2022-23-ஆம் நிதியாண்டில் - நிதி பொறுப்பு மற்றும் நிதி ஒருங்கிணைப்பின்படி மாநிலங்கள் பூஜ்ஜிய வருவாய் பற்றாக்குறை அல்லது வருவாய் உபரியை அடைய 15-ஆவது நிதிக்குழு பரிந்துரைத்தது.
    iii. 2023, மார்ச் 31-ஆம் தேதி நிலவரப்படி, நாட்டில் மொத்தமுள்ள 28 மாநிலங்களில் 16 மாநிலங்கள் வருவாய் உபரியை எட்டியுள்ளது. 12 மாநிலங்கள் வருவாய் பற்றாக் குறையைப் பதிவு செய்துள்ளன.
    iv. இதில் ரூ.37,263 கோடி வருவாய் உபரியுடன் உத்தர பிரதேசம் முதலிடத்தில் உள்ளது. அதற்கு அடுத்தடுத்த இடங்களில் குஜராத் (ரூ.19,865 கோடி), ஒடிஸா (ரூ.19,456கோடி), ஜார்க்கண்ட் (ரூ.13,564 கோடி), கர்நாடகம் (ரூ.13,496 கோடி), சத்தீஸ்கர் (ரூ.8592 கோடி), தெலங்கானா (ரூ.5,994 கோடி), உத்தரகண்ட் ரூ.5,310 கோடி), மத்திய பிரதேசம் (ரூ.4,091 கோடி) மற்றும் கோவா (ரூ.2,399 கோடி) உள்ளன.
    v. வருவாய் பற்றாக்குறை: வருவாய் வரவுகளைவிட செலவுகளை அதிகம் மேற்கொண்ட 12 மாநிலங்களின் ஒட்டுமொத்த வருவாய் பற்றாக்குறை ரூ.2,22,648 கோடியாக உள்ளது. இதை ஈடுசெய்ய நிதிக்குழு மானியமாக ரூ.86,201 கோடி வழங்கப்பட்டது. இது ஒட்டுமொத்த வரவாய் பற்றாக்குறையில் 39 சதவீதமாகும்.
    vi. தமிழ்நாடு, ஆந்திரம், அஸ்ஸாம், பிகார், ஹரியாணா, ஹிமாசல பிரதேசம், கேரளம், மகாராஷ்டிரம், மேகாலயம், பஞ்சாப், ராஜஸ்தான் மற்றும் மேற்கு வங்கம் ஆகிய 12 மாநிலங்களில் வருவாய் பற்றாக்குறை உள்ளது. இதில் தமிழ்நாடு, அஸ்ஸாம், ஹரியாணா, ஹிமாசல பிரதேசம், ராஜஸ்தான் மற்றும் மேற்கு வங்கம் ஆகிய 6 மாநிலங்களின் செலவுத் தொகையில் வருவாய் தொகை விகிதம் 80-90 சதவீதமாக உள்ளது.
3. ரஷியாவின் வான் பாதுகாப்பு சாதனமான எஸ்-400-களை இந்தியாவுக்கு அளிக்கும் ஒப்பந்தப்பணி அடுத்த ஆண்டு நிறைவடையும்.
    i. எதிரி ஏவுகணைகளை வானிலேயே தாக்கி அழிக்கும் ரஷியாவின் எஸ்-400-

களை வாங்க கடந்த 2018, அக்டோபர் 5-இல் மத்திய அரசு ரூ.40 ஆயிரம் கோடியில் ஒப்பந்தம் மேற்கொண்டது.

ii. கடந்த மே மாதம் இந்தியா - பாகிஸ்தான் இடையே ஏற்பட்ட ராணுவ சண்டையில் இந்தியாவின் வான் பாதுகாப்பை எஸ்-400 சிறப்பாக கையாண்டதாக மத்திய அரசு தெரிவித்திருந்தது.

iii. இந்நிலையில், இந்தியாவுடனான ஒப்பந்தத்தின்படி ஐந்து எஸ்-400 வான் பாதுகாப்பு சாதனங்களை ஒப்படைக்கும் பணி அடுத்த ஆண்டு நிறைவடையும். இதுவரை நான்கு சாதனங்கள் ஒப்படைக்கப்பட்டுவிட்டன' என பாதுகாப்புத் துறை வட்டார தகவல்கள் தெரிவிப்பதாக ரஷியாவின் அரசு செய்தி நிறுவனமான டாஸ் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

iv. ரஷியாவிடம் எஸ்-400 வாங்கினால் இந்தியா மீது பொருளாதாரத் தடை விதிக்கப்படும் என்று அமெரிக்கா கடந்த 2021, மார்ச் மாதம் எச்சரித்திருந்தது. இதைப் பொருட்படுத்தாமல் இந்தியா ரஷியாவிடம் எஸ்-400-ஐ வாங்கியது. எனினும், அடுத்த ஆண்டு ரஷியாவுடனான ஒப்பந்தம் முழுவதும் நிறைவடையும் பட்சத்தில் இந்தியா மீது பொருளாதாரத் தடையை அமெரிக்கா விதிக்க நேரிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

v. மாஸ்கோவில் அண்மையில் நடைபெற்ற ரஷியா சுதந்திர தின விழாவில் பிரதமர் மோடியின் சார்பில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற பாதுகாப்புத் துறை இணையமைச்சர் சஞ்சய் சேத், 'ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையின்போது எஸ்-400 வான் பாதுகாப்பு சாதனம் சிறப்பாக செயல்பட்டது. அதிநவீன எஸ்-500ஐ வாங்கவும் இந்தியா முனைப்பு காட்டி வருகிறது' என்றார்.

4. 'செலா' சுரங்கப்பாதை - அருணாச்சல பிரதேசம்.

அருணாச்சல பிரதேசத்தின் ஷி யோமி மாவட்டத்தில் இரண்டு பெரிய அளவிலான நீர்மின் திட்டங்கள்.

i. டாடோ-I நீர்மின் திட்டம் - 186 MW
ii. ஹியோ நீர்மின் திட்டம் - 240 MW

5. அமெரிக்காவின் ஹெச்- 1பி விசாவைப் போல் கே-விசா எனும் புதிய நடைமுறையை அக்.1-ஆம் தேதி முதல் சீனா நடைமுறைப்படுத்தவுள்ளது.

i. உலகம் முழுவதும் இருந்து திறமையான பணியாளர்களை தேர்வுசெய்து அவர்களுக்கு பயிற்சி அளித்து பணி வழங்க அமெரிக்க நிறுவனங்கள் ஹெச்-1பி விசாவை பயன்படுத்தி வருகின்றன. அந்த விசாவுக்கான கட்டணத்தை பலமடங்கு அமெரிக்க அரசு உயர்த் தியுள்ள நிலையில், திறமையான பணியாளர்களை தங்கள் நாட்டுக்கு ஈர்க்கும் விதமாக கே-விசா எனும் புதிய திட்டத்தை அக்.1-ஆம் முதல் சீனா தொடங்கவுள்ளது.

ii. 'கே-விசா நடைமுறையில் சீனா சென்று பணிவாய்ப்பை பெற அந்நாட்டில் உள்ள எந்தவொரு நிறுவனத்தின் அழைப்பும் தேவையில்லை. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கும் இளம் ஆய்வாளர்கள் சீனாவுக்குப் படையெப்பதை ஊக்குவிக்கும் வகையில் இந்த விசாவை அந்நாடு அறிமுகப்படுத்தவுள்ளது.

iii. ஏற்கெனவே அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பணியாளர்களுக்கு சீனா வழங்கும் 12 வகையான விசாக்களுடன் கே-விசாவும் சேர்க்கப்படவுள்ளது. இதில் மேலும் பல சலுகைகள் வழங்கப்படவுள்ளன.

iv. கடந்த சில ஆண்டுகளாக ஹெச்-1பி விசா திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட பணியாளர்களில் 71 சதவீதத்துடன் (2.8 லட்சம்) இந்தியா முதலிடத்திலும், 11.7 சதவீதத்துடன் (46,600) சீனா இரண்டாவது இடத்திலும் உள்ளது

குறிப்பிடத்தக்கது.

6. ஜிஎஸ்டி சீரமைப்பு அமலுக்கு வந்த முதல் நாளான குளிர்சாதன இயந்திரங்கள் (ஏசி), தொலைக்காட்சிப் பெட்டிகளின் (டி.வி) விற்பனை அதிகரித்தது.
   i. 12, 28 சதவீதங்களில் விதிக்கப்பட்ட ஜிஎஸ்டி ரத்து செய்யப்பட்டு, 12 சதவீத வரி விதிக்கப்பட்ட பல பொருள்களின் ஜிஎஸ்டி 5 சதவீதமாகவும், மேலும் பல பொருள்கள் மீது விதிக்கப்பட்ட 28 சதவீத ஜிஎஸ்டி 18 சதவீதமாகவும் குறைக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை தற்போது அமலுக்கு வந்துள்ளது.
   ii. தினசரி அத்தியாவசிய பொருள்கள் மற்றும் உணவுப் பொருள்களின் சோப்பு, ஷாம்பு, பற்பசை, ரேசர் விலையும் குறைந்தது. இந்தப் பொருள்களின் வியாபாரத்தில் ஈடுபடும் நிறுவனங்கள் உள்ளிட்டவற்றின் அதிகபட்ச சில்லறை விலையை (எம்ஆர்பி) மாற்றியமைத்தன.

7. சென்னை அடுத்த கோவளத்தில் நடைபெற்ற தேசிய சர்ஃபிங் சாம்பி யன்ஷிப் (2025) போட்டியில் தமிழகத்தின் கிஷோர் குமார், கமலி மூர்த்தி பட்டம் வென்றனர். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தமிழக சர்ஃபிங் சங்கம் சார்பில் தேசிய சாம்பியன்ஷிப் நடைபெற்றது.